## 105. நல்குரவு

**1041.** *இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்*
*இன்மையே இன்னா தது*

**வறுமையைப் போலத் துன்பமானதும்**
**வருத்தப்பட வைப்பதும் எதுவென உதாரணம் காட்ட**
**வறுமையைத் தவிர வேறு எதுவும்**
**வறுமை போன்று துன்பமானதே இல்லை !**

**1042.** *இன்மை எனவொரு பாவி மறுமையும்*
*இம்மையும் இன்றி வரும்*

**"இன்மை"** என்ற **"வறுமைப்"** பாவியினால்
**இப்பிறப்பில் மட்டுமல்லாது**
**இனி வரும் மறுபிறப்பிலும் தொடர்ந்து**
**இன்பம் அடைய முடியாத நிலை ஏற்படுகிறது !**

**1043.** *தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக*
*நல்குர வென்னும் நசை*

**வறுமை காரணமாக பேராசை மட்டும்**
**வந்து விட்டால் அது அவனுடைய**
**வழி வழியாக வந்த பரம்பரையின் பெருமையையும்**
**வனப்பையும் ஒரு சேரக் கெடுத்து விடும் !**

**1044.** *இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த*
*சொற்பிறக்கும் சோர்வு தரும்*

**"இல்லாமை" எனும் "வறுமை" வந்துவிட்டால்**
**இழிவான சொற்களையே பேசத் தெரியாத**
**இனியதொரு நற்குடும்பத்தில் பிறந்தவர்களிடமும் கூட**
**இழிவான சொல் பிறப்பதற்கான சோர்வினை உண்டாக்கி விடுகிறது !**

**1045.** *நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்*
*துன்பங்கள் சென்று படும்*

**வறுமை என்ற 'இடும்பை' எனும் 'துன்பம்'**
**வந்துவிட்டால் அத்தகையத் துன்பத்திற்குள்**
**பல்வேறு வகையான துன்பங்கள் அடுக்கிப்**
**பலம் கொண்ட வரிசையாக வந்து விளையும் !**

*1046. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்*

**நல்ல பல பொருளை – கருத்துகளை
நல்ல பல நூல்களைக் கற்றறிந்த அறிஞர்கள்
நன்றாகச் சொன்னாலும் – சொன்னவர்
நவிலுதலுக்கு உரியவர் வறியவர் எனில் – அந்த
நல்லாருள் மண்டபத்தில் அரங்கேறாது !**

*1047. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்*

**அற வாழ்விற்குப் பொருந்தாத வகையில்
அவமானமாக வாழ்வதனால் வருகின்ற வறுமைதான்
அறம் சாராத வறுமை என்பது...!
அது வந்து விட்டால் பெற்ற தாயும்
அறவே அவனை ஒதுக்கி
அயலான் போலப் பார்ப்பாள் !**

*1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு*

**"நெருநல்" எனும் நேற்று வந்து கொன்ற
நெருப்பான துன்பம் இன்றும் வந்து
நெருங்கித் துன்பம் தருமோ என
நெஞ்சத்தில் அச்சம் மட்டும் வறுமை
நெருங்கினவனுக்கு எப்போதும் உண்டு !**

*1049. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது*

**நெருப்பு சூழ்ந்திருக்கும் போது கூட
நெஞ்சில் மருகுதல் இன்றி தூங்கலாம் ! ஆனால்
"நிரப்பு" எனும் "வறுமை" சூழ்ந்திருக்கும் போது
"நிம்மதி"யாக தூங்கவே முடியாது !**

*1050. துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று*

**துப்புரவாக முற்றும் இழிந்த வறியவர் – முற்றும்
துறந்த முனிவராக மாறாமல் இருப்பதும்
துய்க்க ஒன்றுமில்லாமல் போனாலும் பசியின்
துயர் துடைக்கப் பிறரிடம் யாசிப்பதும்
துய்க்கும் உப்பிற்கும் கஞ்சிக்கும் கேடு !**

## 106. இரவு

**1051.** *இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்*
*அவர்பழி தம்பழி அன்று*

**"யாசகத்தை"த் தகுதி படைத்தவர்களிடத்திலேதான்**
**யாசிக்க வேண்டும் ! அப்படிக் கேட்ட**
**யாசகத்தைக் கூட செல்வம் இருந்தும் தருவதற்கு இல்லையென**
**யாசகனை மறுத்துவிட்டால் மறுத்தவருக்குத்தான்**
**யாங்கு பழி பாவமே தவிர அவரிடம்**
**யாசகம் கேட்டவரின் குற்றமல்ல !**

**1052.** *இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை*
*துன்பம் உறாஅ வரின்*

**இரப்பவர், இரஞ்சுபவர் ஆகிய சம்பந்தப்பட்ட**
**இருவருக்கும் துன்பம் இல்லாமல் ஒரு பொருள்**
**இருவருக்கும் இடையில் பரிமாறிக் கொண்டிருந்தால்**
**இரப்பது கூட இரப்பவனுக்கு இன்பமே !**

**1053.** *கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்*
*றிரப்புமோர் ஏஎர் உடைத்து*

**கபடமில்லா நெஞ்சம் கொண்டு**
**கணக்கில்லாமல் ஏழைகளுக்கு உதவுவது**
**கடமையே என உணர்ந்த அறிவாளிகளிடம்**
**கலங்காமல் யாசகம் கேட்பதும் அழகே !**

**1054.** *இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்*
*கனவிலும் தேற்றாதார் மாட்டு*

**வசதி இருந்தும் செல்வம் இருந்தும்**
**வறுமையினால் கேட்ட பிச்சைக்குக்**
**கைவிரிப்பதைக் கனவிலும் நினைக்காதவரிடம்**
**கையேந்துவது என்பது அவர்களுக்கு**
**கைம்மாறாக புண்ணிய தானத்தை ஈதலே ஆகும் !**

**1055.** *கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்*
*றிரப்பவர் மேற்கொள் வது*

**உள்ளதை இல்லையென்று மறைக்காமல் வழங்கிடும் நல்ல**
**உள்ளத்தினர் பலர் இருப்பதினால்தான்**
**உலகில் சிலர் யாசகம் கேட்பதையே**
**உரிமையோடு மேற்கொள்கிறார்கள் !**

1056. *கரப்பிடும்பை யில்லாரைக் காணின் நிரப்பிடும்பை*
*யெல்லா மொருங்கு கெடும்*

**மலைபோல் குவிந்திருப்பதைக் கொடுக்க**
**மனமின்றி மறைத்திடும் துயரத்தைத் தராதவர்களைக் கண்டால்**
**வறுமையினால் யாசிப்போரின்**
**வறுத்தும் துன்பம் முழுவதும் ஒழியும் !**

1057. *இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்*
*உள்ளுள் உவப்ப துடைத்து*

**உள்ளத்தால் இழிவாக எண்ணாமலும்**
**உணர்வால் ஏளனமாக உணராமலும்**
**உண்மையில் வாரி வாங்கும் வள்ளலை**
**உடன் கண்டால் யாசிப்பவர்களின்**
**உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள் உவப்புறும் !**

1058. *இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்*
*மரப்பாவை சென்றுவந் தற்று*

**ஈரம் சூழ்ந்த இந்த உலகத்தில்**
**இரந்து வேண்டுபவர்கள் இல்லையெனில்**
**ஈங்கு மக்களின் நடமாட்டம்**
**ஈரமில்லாத உலர்ந்த மரத்தினால்**
**ஈர்ந்த மரப்பாவை பொம்மைகளை கயிற்றினால்**
**ஈர்த்துக் கட்டி இயக்கியது போல் ஆகும் !**

1059. *ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்*
*மேவார் இலாஅக் கடை*

**யாசிக்க இவ்வுலகில் வறியவர்**
**யாரும் இல்லை யெனில்**
**யாசித்தலுக்கான புண்ணியத்தையும் புகழையும் பெற**
**யாரால் முடியும் ?**

1060. *இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை*
*தானேயும் சாலும் கரி*

**"இல்லை" என்று சொல்பவனைக் கண்டு**
**"இரப்பவனுக்கு"க் கோபம் வரக் கூடாது !**
**இரப்பவனிடம் இல்லை என்பவனின்**
**இழிவான இரப்பு நிலைக்குச் சான்று**
**"இரப்பு" நிலையே !**

## 107. இரவச்சம்

*1061.* *கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்*
*இரவாமை கோடி உறும்*

**“கரவாது” இருப்பவர்களைப் போல் இல்லாமல்**
**கனிந்து உவந்து மனப்பூர்வமாய் நீ கொடுக்கும்**
**கனிவான மனிதரிடத்தும் கூடக்**
**கருணை ஈந்து பிச்சை கேட்காமல் இருப்பதைக்**
**கணக்கிட்டால் பன் மடங்கு கோடி பெறும் !**

*1062.* *இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்*

**இரந்துதான் சிலர் உயிர் வாழ வேண்டும்**
**இவ்வுலகத்தில் என்ற நிலையிருந்தால்**
**இந்த உலகத்தைப் படைத்த**
**இந்த இறைவனும் பரந்து திரிந்து**
**இரந்து கெடட்டும் !**

*1063.* *இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்*
*வன்மையின் வன்பாட்ட தில்*

**வறுமையில் சிக்கித் தவிப்பவன்**
**வந்த துன்பத்தை நீக்க ஒரே வழி**
**‘யாசகம்’ கேட்பது தான் என யோசிப்பது போல**
**யாங்கு ஒரு கொடுமை வேறு இல்லை !**

*1064.* *இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்*
*காலும் இரவொல்லாச் சால்பு*

**பிழைத்து வாழ்வதற்கு ஒரு வழியும் கிடைக்காத போதும்**
**பிறரிடம் கையேந்தி கருணை பெற்று**
**பிச்சை கேட்காத பெருங் குணத்திற்குப்**
**பிரபஞ்சத்தில் உள்ள எல்லா உலகும்**
**பிணைந்து வந்தாலும் இடமே போதாது !**

*1065.* *தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்த*
*துண்ணலின் ஊங்கினிய தில்*

**தெளிந்த நீர் போல் அதிக உணவு இல்லாமல்**
**தெளிவாகக் காய்ச்சிய கஞ்சியே ஆனாலும்**
**சொந்த உழைப்பால் சம்பாதித்துக் குடித்தால்**
**சொர்க்கமாக இருக்கும் !**

*1066.* *ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்*
*கிரவின் இளிவந்த தில்*

**'ஆ' எனும் பசுவின் உயிரை**
**ஆபத்திலிருந்து காப்பாற்ற தண்ணீர் வேண்டுமென**
**நயத்துடன் இரந்து கேட்டாலும் – கேட்ட**
**நாவிற்கு அப்படிப்பட்ட இழிவு வேறொன்றுமில்லை !**

*1067.* *இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பிற்*
*கரப்பார் இரவன்மின் என்று*

**பிச்சையெடுக்க நேர்ந்தாலும் – வைத்துக் கொண்டு**
**பிச்சை இல்லை என்று சொல்லுகின்றவர்களிடம்**
**பிச்சை கேட்கவே வேண்டாம் என**
**பிச்சை கேட்பவர்களைப் பார்த்துப்**
**பிச்சை கேட்கிறேன் !**

*1068.* *இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்*
*பார்தாக்கப் பக்கு விடும்*

**"இரத்தல்" எனும் பாதுகாப்பற்ற படகு மூலம்**
**இவ்வறுமை எனும் கடலைக் கடக்க மிதக்கும் போது**
**இருப்பதை மறைத்து இல்லை எனச் சொல்லும்**
**இறுகிய பாறை மீது மோதி உடைந்து விடும் !**

*1069.* *இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள*
*உள்ளதூஉம் இன்றிக் கெடும்*

**இரந்து வாழ்வோரின் நிலையை நினைத்தால்**
**இந்த உள்ளமே உருகுகிறது !**
**இருப்பதைக் கொடுக்க மனமின்றி மறைத்து**
**"இல்லை" என்போரை நினைத்தால்**
**இந்த உள்ளம் உருகுவதையே ஒழித்து விடுகிறது !**

*1070.* *கரப்பவர்க் கியாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்*
*சொல்லாடப் போஒம் உயிர்*

**"இல்லை" என்ற "சொல்லை"க் கேட்டவுடன்**
**இரப்பவரின் உயிர் இல்லாமல் போகிறதே ! – ஆனால்**
**"ஈய மாட்டேன்" என்று சொல்கிற கருமியின் உயிர்**
**இருக்கும் இடம் தெரியாமல் எங்கே ஒளிந்திருக்கும் ?**